DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 514/2019
Prosecution Witness PW 7

.....

Name : திருமதி. செல்வராணி    Caste :
Father's name :    Calling :
Village :    Religion :
Taluk :    Age :

நாள் **- 25.09.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது வீரபாண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2019 ஆம் ஆண்டில் நான் சாத்தமங்கலம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக நானும், என்னுடைய உதவியாளர் திரு. மணிகண்டன் என்பவரும் பணியில் இருந்தபோது 31.07.2019 அன்று பகல் சுமார் 01.00 மணியளவில் வள்ளுவர் வடக்குத் தெரு, ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த போஸ் மகன் அருண்குமார் என்பவர் எங்கள் அலுவலகத்தில் ஆஜராகி கடந்த 07.04.2019 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் மதுரை, ஆம்னி பேருந்து நிலையத்தின் எதிரில் ஒரு மரத்தடியில் பெட்டி வைத்து பஞ்சர் கடை வைத்திருக்கும் கோவிந்தராஜ் என்பவரை அடித்து தள்ளியதில்

மேற்படி கோவிந்தராஜ் விழுந்துவிட்டதால், அங்கிருந்து ஓடி விட்டேன் என்றும், மறுநாள் வேலைக்குச் சென்றபோது அடித்து விடப்பட்டவர் இறந்துவிட்டார் என்ற தகவல்தெரிந்து அங்கிருந்து தலைமறைவாகி விட்டதாகவும், கடந்த 03 மாதங்களாக தலைமறைவில் இருந்து வந்ததாகவும், தற்சமயம் காவல் துறையினர் தேடிவருவதால் காவல்துறையில் சரணடைந்தால் அடித்து துன்புறுத்துவார்கள் என்ற பயத்தினால் தங்களிடம் சரணடைந்ததாகவும் என்னிடம் சொன்னார். மேற்படி விபரங்களை வாக்குமூலமாக எழுதி அதில் எதிரி அருண்குமாரிடம் கையெழுத்து பெற்றேன். அந்த வாக்குமூலத்தில் நானும், என் உதவியாளர் திரு. மணிகண்டன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எதிரி என்னிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலமாகும். அது அ.சா.ஆ. **4.** பின்பு என்னிடம் ஆஜரான அருண்குமாரை அழைத்துக் கொண்டு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்துடன் நானும், என் உதவியாளர் திரு. மணிகண்டன் என்பவரும் மதுரை, அண்ணாநகர் காவல் நிலையத்திற்கு ஆட்டோவில் அழைத்துச் சென்று எதிரியை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அப்போது நடந்த விபரம் பற்றி நான் ஒரு அறிக்கையாக

காவல்ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கைதான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தது அது அ.சா.ஆ. **5** ஆகும். அதன்பின்பு, ஆய்வாளர் மேற்படி எதிரி அருண்குமாரை விசாரித்து கைது செய்து அவரிடம் ஒரு வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த வாக்குமூலத்தில் எதிரி அருண்குமார் கையெழுத்து செய்தார். பின்பு நானும் என் உதவியாளர் திரு. மணிகண்டன் என்பவரும் அதில் கையெழுத்து செய்தோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் தன்னை அழைத்துச் சென்றால் சம்பவ இடத்தினை காட்டி சம்பவம் நடந்தது பற்றி நடித்துக் காட்டுவதாகச் சொன்னார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மேலே உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. **6**. ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் கீழ் உள்ள கையெழுத்து என்னுடைய உதவியாளர் திரு. மணிகண்டன் என்பவரின் கையெழுத்துதான். இது சம்பந்தமாக அண்ணாநகர் காவல் ஆய்வாளர் என்னையும் என் உதவியாளர் திரு. மணிகண்டன் என்பவரையும் விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை. (வழக்கறிஞர் ஆஜரில்லை.)

ஒப்பம் - செல்வராணி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.